தாய்வீடு • ஏப்பிரல் April 2013

# கூத்துக்கலையை அடையாளப்படுத்தியவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்

ஆழத்து முத்துக்கள் 95

அநாமதேயமாகக் கிடந்த கூத்துக்கலையை அடையாளப்படுத்தியவர்
பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள்.
- தெளிவத்தை ஜோசப்.

**- தெளிவத்தை ஜோசப் -**

கூத்து என்னும் கலை ஈழத்தமிழ் பண்பாட்டில் மிகவும் குறைவான ஓர் இடத்திலேயே வைக் கப்பட்டிருந்தது. ஆங்கிலக் கல்வி, அதன் வழி உருவான ஓர் உயர் மத்தியதரச் சமூகம், பாரம்பரியத் தமிழ் பண்பாட்டிலிருந்து தூரமா கிப்போகும் தன்மை ஆகியவை நாட்டுக்கூத் தினை ஒரு இழிவான செயற்பாடாகவே தள்ளி வைத்திருந்தது.

நாவலரின் கோபத்திற்கும் கூத்து ஆளாகியி-ருந்த காலம் அது.

ஆங்கிலக் கல்வி மூலம் வந்து சேர்ந்த பார்சி மரபுடனான பம்மல் சம்பந்த முதலியாரின் சபா நாடக மரபே யாழ்ப்பாணத்தில் ஓரளவு சமூகக் கணிப்பைப் பெற்றிருந்தது. நாட்டுக்கூத்து ஓர் இழிந்த கலையாகவே தள்ளி வைக்கப்பட்-டிருந்தது என்று குறிக்கின்றார் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள்.

இப்படியானதொரு நிலையில் நாட்டுக்கூத்துக் கலையே நமது பண்பாட்டுக் கோலத்துக்குரிய நாடக வடிவம் என்பதை பல்கலைக்கழக மட்டத்தில் நிலைநிறுத்திய பெருமைக்குரிய வர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள்.

1956ல் இலங்கைக் கலைக்கழகத்தின் நாடகக் குழுவுக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டிருந்தார்.

ஈழத்தமிழருடைய நாடகக் கலையின் அடிப் படை நாட்டுக்கூத்தே என்பதையும், இரவிரவாக ஆடப்பட்டுவந்த இக்கூத்து நகரவாழ்வின் அவசர மாற்றங்களினால் அழிந்துபோகும் அபாய நிலையை எட்டியுள்ளது என்பதையும் நன்கு உணர்ந்திருந்த பேராசிரியர் வித்தி அவர்கள் நாட்டுக்கூத்துக் கலையை மீட்டெடுக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கினார். கூத்துக் கலை பற்றிப் பெரிதாக யாரும் பேசவில்லை யாயினும் மட்டக்களப்பிலும், மன்னாரிலும், யாழ்ப்பாணத்தில் குருநகர் போன்ற சில இடங்க ளிலும் வன்னியிலும் தீவுப்பகுதியிலும் தொடர்ந்து நாட்டுக்கூத்துக்கள் ஆடப்பட்டே வந்தன.

நாடகக் குழுத்தலைவராக இருந்த வித்தியா-னந்தன் அவர்கள் இப்பிரதேசங்களில் ஆடப்பட்டு வரும் நாட்டுக்கூத்துக்களை நேரில் சென்று பார் வையிடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டார்.

இக்கூத்துக்கள் பட்டைதீட்டப்படாத வைரங்கள் என்றும், பட்டை தீட்டினால் அவற்றின் மதிப்பு உயர்ந்துவிடும் என்றும் நம்பினார்.

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட் டுக்கு அவர் சமர்ப்பித்த ஆங்கில ஆராய்ச்சிக் கட்டுரையே நாட்டுக்கூத்தை மையமாகக் கொண்டதுதான்.

நாடகப்பண்பினை முக்கியமாகக் கொண்டு, ஆடல்பாடல், உடை, ஒளி முதலியவற்றைக் கலை உணர்வுடன் இணைக்காத தன்மையே நாட்டுக்கூத்தின் முக்கிய குறைபாடாக உள்ளது. பெரும்பாலும் மக்கள் நாடக உணர்வினை விடுத்து ஆடல்களைக் கண்டு களிப்பதற்கும் பாடல்களைக் கேட்டு ரசிப்பதற்குமே வருகின் றனர். நாடகத்தின் முழுமைபற்றி அவர்கள் எண்ணுவதில்லை. நடிப்புக்கு அங்கு எவ்வித இடமுமில்லை. பாடலும் ஆடலும் இணைந்தி ருப்பதால் நாட்டுக்கூத்துக் கலைஞர் பலர் அவைகளே முக்கியம் என்று கருதினர். ஆட்டமும் நடிப்பும் ஒன்றிணையவேண்டிய தேவையே இப்பொழுது ஏற்பட்டுள்ளது. மத்தள ஒலி நடிகர்களின் குரலை அடக்கி விடுகிறது. நடிகரின் குரல் முக்கியம். ஒப்பனை, உடை யலங்காரம், ஒளியினைக் கையாளுதல் போன் றவைகளில் புதிய உத்திகள் கையாளப்பட வேண்டும். கூத்து நடைபெறும் நேரமும் கட்டாயமாகக் குறைக்கப்பட வேண்டும்.



இந்தச் சிறுசிறு குறைகள் மாற்றியமைக்கப் பட்டால் கூத்தின் நாடகப் பண்பு சிறப்படையும் என்பதே கலாநிதி வித்தியானந்தன் அவர்கள் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு சமர்ப்பித் திருந்த விரிவான ஆய்வுக் கட்டுரையின் தமிழ்ச் சுருக்கம். *(நன்றி பேராசிரியர் அ.சண்முகதாஸ் - துணை வேந்தர் வித்தி)*

கூத்தாடுபவர்கள் பாமரர்களே! கூத்துக்கலை பட்டிக்காட்டான் ஆட்டம் என்ற கருத்து பரவ லாகவே படித்தவர்கள் மத்தியில் இருந்தது. முதலில் இந்த எண்ணத்தை மாற்ற வேண்டும் என்று துணிந்து செயற்பட்ட கல்விமான் வித்தியானந்தன் அவர்கள்.

அநாமதேயங்களாகக் கிடந்த கூத்துக் கலை ஞர்களை ஆளுமையாளர்களாக அடையாளப் படுத்தக் கிளம்பிய இவருடைய பணிகளுக்கு கூத்துக்கலைஞர்களின் ஒத்துழைப்புக் கிடைக்க வில்லை. அவர் சுட்டிக்காட்டும் குறைகளை தவிர்த்துக்கொள்ள இவர்கள் முயலவில்லை. 'நீ சொல்வதைச் சொல் நான் செய்வதையே செய்வேன்' என்ற ரீதியிலேயே இயங்கினர்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களோ 'எப்படியோ போங்கள்' என்று விட்டுவிடவில்லை. அண்ணாவிமார்களை அவரவர் ஊர்களில் சந்தித்துப் பேச ஏற்பாடுகள் செய்தார். கலந்-துரையாடினார். பேராசிரியர் சண்முகதாஸ், பேராசரியர் மௌனகுரு போன்றவர்கள் வித்தி யானந்தன் அவர்களுக்கு பக்கபலமாக நின்றனர்.

நாடகப் பண்பினுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நேரத்தைக் கட்டுப்படுத்தி, கலையுணர்வுடன் ஒரு நாட்டுக்கூத்தை எப்படித் தயாரிக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக ஒரு கூத்து தயாரிக்கப்பட்டு மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், வன்னியிலுள்ள அண்ணாவி-மார்களுக்கெல்லாம் காண்பிக்கப்பட்டது. இந்தப் புதுமுறைக் கூத்து 'கர்ணன் போர்' என்று பெயரிடப்பட்டிருந்தது.

இந்த 'கர்ணன்போர்' என்னும் நவீன முறைக் கூத்தை 1962ல் பல்கலைக்கழகப் பெரும்படிப்பு மாணவர்கள், விரிவுரையாளர்களை ஒன்றி-ணைத்து தயாரித்து பல்கலைக்கழகத்திலும் ஊர் ஊராகவும் மேடை ஏற்றிக் காண்பித்தார் வித்தியானந்தன் அவர்கள்.

பெரும்படிப்புக்காரர்கள் திரும்பியும் பார்க்காத, அசட்டையாக ஒதுக்கி வைத்திருந்த நாட்டுக் கூத்து பற்றி அவர்களே அக்கறையுடன் தேடவும் அறிந்துகொள்ளவும், ஈடுபாட்டுடன் தயாரிப்பில் ஈடுபடவும் நடிக்கவுமாக நாட்டுக்கூத்துக்கு ஒரு புத்துயிர்ப்பினை ஏற்படுத்தினார்.

கூத்துடன் மாணவவயதிலிருந்தே ஈடுபாடு கொண்டிருந்த மௌனகுரு அவர்கள் கர்ணன் போர் தயாரிப்பில் பேராசிரியருக்கு வலது-கரமாக நின்றுழைத்தவர்.

அறுபதுகளில் 'கர்ணன் போர்' ஏற்படுத்திய பரபரப்பும், அதற்குக் கிடைத்த பாராட்டுக் களும் கொஞ்ச நஞ்சமல்ல.

1962ல் கர்ணன் போர், 1964ல் நொண்டி நாடகம், 1965ல் இராவணேசன், 1968ல் வாலி வதை என்று நவீனமயப்படுத்தப்பட்ட நிறைய கூத்-துக்களை மேடையேற்றியவர் பேராசிரியர்.

1924 மே 8ல் யாழ்ப்பாணம் வீமன்காமத்தில் பிறந்தவர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள்.

வீமன்காமம் தமிழ்ப்பாடசாலை, தெல்லிப்பழை தமிழ் ஆங்கிலக் கல்லூரி யாழ் பரி.யோவான் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று கொழும்புப் பல்கலைகழத்தில் கலைமாணிப் பட்டத்தை 1944இல் பெற்றுக்கொண்டார்.

*தொடர்தல் 117ம் பக்கம்*


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

**கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்**
**உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்**
**மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.**

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

# கூத்துக்கலையை...

114ம் பக்கத் தொடர்ச்சி...

இவருடைய பல்கலைப்புலமைகளுக்கு இவ-ருக்குக் கல்வி கொடுத்த பேராசிரியர்களும் முக்கிய காரணிகளாகின்றனர்.

சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் க.கணபதிப் பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம் ஆகியோரிடம் பாடம் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றவர் இவர்.

1946 ல் முதுகலைமாணிப்பட்டம் பெற்றதுடன் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் துணை விரிவுரையாளராகப் பதவியேற்றார்.

1948ல் லண்டன் சென்று கலாநிதிப் பட்டம் பெற்றுத்திரும்பி, விரிவுரையாளர், பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர், யாழ் பல்கலைக் கழத்தின் முதல் துணை வேந்தர் என்று உயர்ந்தவர்.

பேராசிரியரின் நாடக முயற்சி அவரது குரு வான கணபதிப்பிள்ளை அவர்களின் நாடகங்க ளைத் தயாரித்து இயக்குவதுடன் தொடங்குகிறது.

வித்தியானந்தன் அவர்கள் விரிவுரையாளராக இருந்த காலத்தில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை யின் 'பொருளோ பொருள்' என்ற நாடகத்-தைத் தயாரிக்கத் தொடங்கினார். ராஜா ராணிக் கதைகள், செந்தமிழ் பேசும் பாத்திரங்கள் என்றிருந்த தமிழ்நாடக மேடையில் சாதாரண மனிதனையும் அவனுடைய பேச்சு மொழியை யும் ஒலிக்க விட்டவர் பேராசிரியர் கணபதிப் பிள்ளை என்பது மனம் கொள்ளத் தக்கது.

புறக்கணிப்புக்குள்ளானவர்களை புகழ்படுத்தும் உள்ளுணர்வு மிக்கவரான சு.வித்தியானந்தன் அவர்கள் கணபதிப்பிள்ளையவர்களின் நாட-கத்தில் நாட்டம் கொண்டதில் வியப்பில்லை. பல்கலைக்கழக மாணவர்களை நாடகத்தில் ஈடுபடுத்தும் செய்கையாகவும் வித்தியவர்களின் இந்த நாடகத் தயாரிப்புக்கள் செயல்பட்டன.

பல்கலைக்கழக மட்டத்தில் நாடகக் கலை பற்றிய உணர்வினை ஏற்படுத்த இப்பணிகள் துணை நின்றன.

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையவர்களின் நாடகங்கள் பலவற்றை தயாரித்து பல்கலைக் கழகத்திலும், கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப் பாணம், போன்ற இடங்களிலும் மேடை ஏற்றினார்.

இவர் தயாரித்து இயக்கிய நாடகங்களில் பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி, சண்முகதாஸ், மௌனகுரு போன்றவர்களும், அமரர், முன்னைநாள் தினகரன் பிரதம ஆசிரியர் இ.சிவகுருநாதன், தமிழர் கூட்டணித்தலைவர் அ.அமிர்தலிங்கம் போன்ற அப்போதைய பல் கலைக்கழக மாணவர்களும் விரிவுரையாளர் களும் பாத்திரமேற்று நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1948ல் பொருளோ பொருள், 1950ல் முருகன் திருகுதாளம், 1951ல் சங்கிலி, 1953ல் உடை யார் மிடுக்கு, 1954ல் தவறான எண்ணம், 1955ல் சுந்தரம் எங்கே, 1956ல் துரோகிகள் ஆகியவை பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் மேடையேற்றப்பட்ட கணபதிப் பிள்ளை அவர்களின் நாடகங்களாகும்.

அறுபதுகளின் பின் நாட்டார் கூத்துக்களை நகரத்தார் அறியப்பண்ணும் பணிகளில் ஈடு-படத்தொடங்கினார்.

நாட்டுக்கூத்துக்களை நவீன மேடைக்கும் நகரத்தாருக்கும் நல்லமுறையில் அறிமுகம் செய்த சு.வித்தியானந்தன் அவர்கள் நாட்டுக் கூத்துக்களை பதிப்பிக்கும் முயல்விலும் ஈடு பட்டார்.

அண்ணாவிமார்களிடம் இருந்து நாட்டுக்கூத்-துக்களைப் பெற்று அவற்றை ஆராய்ந்தும் திருத்தியமைத்தும், கலைக்கழகம் மற்றும் பிரதேச உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் உதவிகளுடன் இணைந்து நூலாக்கிய பெரும் பணிகள் என்றும் வரலாற்றில் நிலைத்து நிற்பவை.

அந்தவகையில் மட்டக்களப்பு நாட்டுக்கூத் தான 'அலங்காரரூபன் நாடகம்' 1962ல் அச்சில் பதிப்பிக்கப்பட்டது.

மன்னார் கீதாம்பிள்ளைபாடிய 'என்டிறிக்கு எம்பிரதோர் நாடகம்' 1964ல் அச்சிடப்பட்டது. ஒரு மன்னார்ப் புலவரின் நூல் முதன்முதலாக அச்சாக்கப்பட்ட வரலாறு இது.

இதைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட உள்-ளூராட்சி மன்றங்களின் ஆதரவுடன் 'மூவி-ராசாக்கள்' (1966) 'ஞான சவுந்தரி' (1967) ஆகிய இரண்டு மன்னார் நாடகங்கள் நூலுருப் பெற்றன.

மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அண்ணாவிமார்களுக்கான மாநாடு களை நடத்தினார். ஒவ்வொரு அண்ணாவி-மாரையும் அவருடைய சிறப்பான பணிகளுடன் அறிமுகப்படுத்தி, மாலை அணிவித்து, பொன் னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நடிகமணி வி.வி வைரமுத்துவின் 'அரிச்சந்திர மயான காண்டத்தை' ஊர் ஊராக மேடை ஏற்றியும் அறிமுக உரையாற்றியும் மகிழ்ந்தவர் வித்தியானந்தன் அவர்கள்.

நூறாவது தடவையாகவும் 'மயான காண்டம்' மேடையேறியபோது யாழ். நகர மண்டபத்-தில் ஒரு விழா ஏற்பாடு செய்து நடிகமணி வி.வி.வைரமுத்துவுக்கு பொற்கிழி வழங்கிக் கௌரவித்தார்.

யாழ்ப்பாணத்தின் கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வி.வி.வைரமுத்து, கிருஷ்ணாழ்வார், மட்டக்களப்பின் க.செல்லையா அண்ணாவியார், சி.தங்கராஜா அண்ணாவியார், முல்லைத்தீவின் முல்லை மணி வே.சுப்பிரமணியம், மன்னார் பெஞ்சமின் போன்றோர் பேராசிரியர் வித்தி-யானந்தன் அவர்களால் தேசிய ரீதியில் அறி முகப்படுத்தப்பட்ட கலைஞர்கள்.

தமிழ்நாடக நூல்களை எழுதுவோர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் நாடக எழுத்துப் போட்டிகளைக் கலைக்கழகம் மூலம் நடத்-தியவர் இவர்.

1958, 1959, 1960 ஆம் ஆண்டுகளில் நடந்த இப்போட்டிகளில் பரிசுகளும் வழங்கப்பட்டு பரிசு பெறும் நாடகப் பரதிகளை நூலாக்கும் பணியும் நடைபெற்றது.

திருவாளர்கள் சொக்கன், எஸ்.பொ, செம்பியன் செல்வன், த.சண்முகசுந்தரம், கதிரேசப்பிள்ளை, முத்துசிவஞானம், முல்லைமணி, தேவன், ஏ.டி.பொன்னுதுரை, திமிலைத்துமிலன் போன்ற நாடக எழுத்தாளர்கள் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர். பரிசும் பெற்றனர்.

கலைக்கழகத்தின் தமிழ் நாடகக்குழுவின் தலைவராக பேராசிரியர் இருந்தபோது ஏற்ப டுத்திய நாடக விழாக்களில், அவற்றில் மேடை யேறிய நாடகங்களில், அ.தாசீசியஸ், நா. சுந்தரலிங்கம், சி.மௌனகுரு, மாத்தளை கார்த்திகேசு, பௌசுல் அமிர், கே.ஏ.ஜவாகர், லத்தீப், ம.சண்முகலிங்கம், அ.ரகுநாதன் கலைச் செல்வன், பிரான்சிஸ் ஜெனம்போன்ற நாடக உலக பிரபலங்கள் பலர் நடிகர்களாக, இயக்குனர்களாக பங்கு கொண்டுள்ளனர்.

'அரசின் கீழியங்கும் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவின் தலைவராக பேராசிரியர் வித்தியானந்தன் பதவியேற்ற காலத்தில் செயற் பட்டது போல் இந்த நாடகக்குழு எக்காலத் திலும் செயற்பட்டதில்லை. அப்பதவியினை தன்னுடைய நலனுக்காகப் பயன்படுத்தாமல் ஈழத்தமிழருடைய பண்பாட்டைப் பாதுகாக்கும் செயல்களுக்காகப் பயன்படுத்தியவர் துணை வேந்தர் வித்தியானந்தன்' என்னும் பேராசிரியர் அ.சண்முதாசின் புகழாரம் முற்றிலும் உண்மை யானதே. வீண் புகழ்ச்சி அல்ல, என்பதை பேராசிரியர் வித்தியானந்தனுடைய பணிகள் உறுதி செய்கின்றன.

ஈழத்துத் தமிழ் நாடக உலகின் ஒரு கால கட்டத்து அச்சாணியாக இருந்து அதை இயக் கிய, செழுமைப்படுத்திய, ஒருவராக நம் முன் நிற்பவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள்.



theliwathai.joseph@thaiveedu.com